## December 2, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நில மோசடி வழக்கில், வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு 5 ஆண்டுகளும் அவரின் உறவினரும், பிரிட்டன் எம்.பி.யுமான துலிப் சித்திக்குக்கு 2 ஆண்டுகளும் சிறைத் தண்டனை விதித்து டாக்கா சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
    i. 'பூர்பாச்சால் நியூ டவுன்' திட்டத்தின்கீழ் நில ஒதுக்கீடுகளில் முறைகேடுகள் நடந்ததாகக்கூறி,ஷேக் ஹசீனா மீது வங்கதேச ஊழல் தடுப்பு ஆணையம் கடந்த ஜனவரியில் 6 வழக்குகளைப் பதிவு செய்தது. விதி முறைகளை மீறி, அரசு நிறுவனமான 'ராஜுக்' அதிகாரிகளுடன் இணைந்து, தனக்கும் தனது உறவினர்களுக்கும் தலா 7,200 சதுர அடி கொண்ட 6 இடங்களை ஷேக் ஹசீனா சட்டவிரோதமாகப் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.
2. வெனிசுலாவை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அந்த நாட்டு அதிபர் நிக்கோலஸ் மடுரோவுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளார்.
    i. டிரம்ப்பின் இந்த உத்தரவு, வெனிசுலாவின் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு எதிரான அமெரிக்கா தீவிரமாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகும்.
    ii. கடந்த செப்டம்பர் முதல் கரீபியன் பகுதியில் அமெரிக்க கடற்படை பெரும் அளவில் குவிக்கப்பட்டுள்ளது. இது போதைப் பொருள் கடத்தல், சட்டவிரோத அகதிகள் கடத்தலுக்கு எதிரானது என்று வெள்ளை மாளிகை தெரிவித்தது.
3. எஃப்1 கார் பந்தயத்தின் 23- ஆவது ரேஸானகத்தார் கிராண்ட் ப்ரீயில், ரெட் புல் டிரைவரும், நெதர்லாந்து வீரருமான மேக்ஸ் வெர்ஸ்டாபென் வெற்றி பெற்றார்.]
4. சவூதி அரேபியாவில் 2026-இல் நடைபெறவுள்க்ள 17 வயதுக்கு உட்பட்டோருக்கான (அண்டர் 17) ஆசிய கோப்பை கால்பந்து போட்டிக்கு இந்தியா தகுதிபெற்றது.
5. இணைய (சைபர்) மோசடிகளைத் தடுக்கும் நோக்குடன், வாட்ஸ் ஆப், டெலிகிராம், சிக்னல் உள்ளிட்ட செயலி சார்ந்த தகவல் தொடர்பு சேவை நிறுவனங்களுக்கு மத்திய அரசு புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
    i. ஒரு பயனர் எந்த எண்ணைப் பயன்படுத்தி தகவல்தொடர்பு செயலியில் பதிவு செய்தாரோ, அவர் பயன்படுத்தும் கைப்பேசியில் அந்த எண்ணின் சிம் கார்டு தொடர்ந்து இணைந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும். கைப்பேசியில் இருந்து சிம் கார்டு அகற்றப்பட்டாலோ அல்லது மாற்றப்பட்டாலோ, சேவைக்கான அணுகல் துண்டிக்கப்பட வேண்டும்.
    ii. மேலும், இந்தத் தகவல்தொடர்பு செயலிகளின் வலைதள சேவைகளிலும் ஒவ்வொரு ஆறு மணிநேரத்துக்கும் பயனர்கள் தானாக வெளியேற்றப்படுவர். இந்த விதிமுறையை அடுத்த 90 நாள்களுக்குள் நடைமுறைப்படுத்த நிறுவனங்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.
    iii. தொலைப்பேசி எண்ணை அடையாள நோக்கத்துக்காகப் பயன்படுத்தினாலும், கைப்பேசியில் சிம்கார்டு இல்லாமலேயே பயனர்கள் தங்கள் சேவைகளைத் தொடர்ந்து பயன்படுத்த சில தகவல்தொடர்பு செயலிகள் அனுமதிக்கின்றன. இது சைபர் பாதுகாப்புக்குப் பெரும் சவாலாக உள்ளது. வெளிநாடுகளில் இருந்து சைபர் மோசடிகளைச் செய்ய இந்த அம்சம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்று தொலைத் தொடர்புத் துறை தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
    iv. பயனர்களுக்கு என்ன பாதிப்பு?...: இந்த விதிமுறைகள் அமலுக்கு வந்தால், ஒரு சிம் கார்டைப் பயன்படுத்தி, ஒன்றுக்கும் மேற்பட்ட சாதனங்களில் ஒரே கணக்கைப் பயன்படுத்தும் பயனர்களுக்குச் சிரமங்கள் ஏற்படலாம்.

'வாட்ஸ்ஆப் வெப்' போன்ற வசதிகளைப் பயன்படுத்தி கணினியில் தகவல்தொடர்பு மேற்கொள்ளும் பயனர்கள், ஒவ்வொரு 6 மணி நேரத்துக்கும் ஒருமுறை தானாக வெளியேற்றப்படுவர். பின்னர், சிம்கார்டு இணைக்கப்பட்டுள்ள கைப்பேசியில் இருந்து 'கியூ.ஆர்.' குறியீடு அல்லது ஓடிபி மூலம் அவர்கள் மீண்டும் உள்நுழைய வேண்டும்.

6. ஒருங்கிணைந்த வக்ஃப் மேலாண்மை, அதிகாரமளித்தல், திறன் மற்றும் மேம்பாடு (யுஎம்இஇடி) வலைதளத்தில் வக்ஃப் சொத்துகள் குறித்த தகவல்களை கட்டாயம் பதிவேற்றம் செய்வதற்கான காலஅவகாசத்தை நீட்டிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்தது.
   i. நாடு முழுவதும் உள்ள வக்ஃப் சொத்துகள் குறித்த தகவல்களை 6 மாதத்துக்குள் எண்மமயமாக்கும் வகையில் யுஎம்இஇடி வலைதளத்தை மத்திய அரசு ஜூன் 6-ஆம் தேதி அறிமுகப்படுத்தியது. இந்த காலகட்டத்துக்குள் வக்ஃப் சொத்துகள் குறித்த தகவல்களை வலைதளத்தில் கட்டாயம் பதிவேற்றம் செய்ய மத்திய அரசு தெரிவித்தது.

7. இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய மூன்றுநாடுகளில் கடந்த வாரம் ஏற்பட்ட கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.
   i. இதில் இலங்கையில் 355 பேர், இந்தோனேசியாவில் 604 பேர், தாய்லாந்தில் 176 பேர் உயிரிழந்துள்ளனர். மலேசியாவில் 3 உயிரிழப்புகளுடன் கனமழை, வெள்ளத்தில் மொத்தம் 1,138 பேர் உயிரிழந்துள்ளனர். லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்ட நிலையில், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.
   ii. இலங்கையின் கிழக்கு, மத்தியப் பகுதிகளில் 500 மி.மீ.க்கும் மேல் மழை பெய்ததால் நிலச்சரிவுகள் ஏற்பட்டு 355 பேர் உயிரிழந்தனர்; ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் தற்காலிக உறைவிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கொழும்பு நகரம் முழுவதும் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளது.